# கந்தாடை தோழப்பர்
## வாழி திருநாமம்

பூரமதில் கடகத்தில் புவி உதித்தோன் வாழியே
புகழ் பெரிய நம்பிள்ளை பொற்பதத்தோன் வாழியே
பார் மலி ராமானுஜாசார்யன் பகர் குமாரன் வாழியே
பரம பத்தி மெய்ஞ்ஞானப் பதத்திருப்போன் வாழியே
வாரணாதீசுவரர் நாமம் வாய்ந்திருப்போன் வாழியே
வாச்சலியக் கடலென்ன வாழ்ந்தருள்வோன் வாழியே
காரி மாறன் தமிழ் மறையின் கருத்தறிந்தோன் வாழியே
கந்தாடை தோழப்பர் கழலிணைகள் வாழியே

---